**EXAMINATION UNDER ORDER X RULE 2 CPC**
**IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI**
**KRISHNAGIRI DISTRICT**

| | | | |
|---|---|---|---|
| **Case No.** | OS.81/2023 | | : |
| **Name** | உதயகுமார் | **Father Name** | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 26.02.2026 administered by District Munsif, Uthangarai.

**துவக்க நேரம் - 12.15 PM**

வாதி கட்டளை 10 விதி 2 சிபிசி படி விசாரணைக்காக முன்னிலையாகி விசாரணை

**நீதிமன்ற கேள்வி:** எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளீர்கள்?

**பதில்:** தாவா சொத்தை நான் கிரயம் வாங்கி வீடு கட்டி உள்ளேன். பிரதிவாதிகளும் எங்கள் கிராமத்தைச் சேர்ந்த கிராம நிர்வாக அலுவலர் அவருடைய உதவியாளர் ஆகியோர் வந்து தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு சேர்வதாகவும் அதை அளக்க வந்துள்ளதாகவும் கூறினார்கள். அப்போது அவர்களுக்கு சேரும் இடத்தில் நாங்கள் கட்டியுள்ள வீட்டை இடிப்பதாகவும் கூறினார்கள். நான் அவ்வாறு செய்ய வேண்டாம் எனக்கு விற்பனை செய்பவரை கேட்கிறேன் என்று கூறிவிட்டு எனக்கு விற்பனை செய்த கலீல் என்பவரை அணுகி கேட்டேன். அவர் இந்த வழக்கின் எங்கள் வழக்கறிஞரான திரு. வடிவேல் வழக்கறிஞர் அவர்களிடம் எங்களை அனுப்பி வைத்தார். பிரதிவாதிகள் அப்போது அந்த இடத்தை அளந்து விட்டு சென்று விட்டனர். பிரதிவாதிகளுடன் நீதிமன்றத்தில் இருந்து ஒரு ஊழியர் வந்து எங்களுடைய சொத்து பிரதிவாதிகளுக்கு சேர்வதாக அதை அளக்க வந்ததாகவும் கூறினார்.

**நீதிமன்ற கேள்வி:** இதற்கு முன்பு பிரதிவாதிகளின் தந்தை வழக்கு தாக்கல் செய்து அதில் உங்களுக்கு அழைப்பானை வந்ததா?

**பதில்:** ஒரு அழைப்பானை மட்டும் வந்தது அதை எங்களுக்கு நிலத்தை விற்பனை செய்தவரிடம் காட்டினோம் அவர் எங்கள் தற்போதைய வழக்கறிஞரிடம் எங்களைஅனுப்பி வைத்தார்.

**நீதிமன்ற கேள்வி:** அந்த வழக்கு என்ன தீர்ப்பானது தெரியுமா?

**பதில்:** எனக்கு எதுவும் தெரியாது வழக்கறிஞர் அழைக்கும் போது வருவேன். அவர் கேட்கும் ஆவணங்களை அவரிடம் சமர்ப்பிப்பேன்.

**நீதிமன்ற கேள்வி:** நீங்கள் தாக்கல் செய்துள்ள தாவாவில் என்ன சங்கதிகள் உள்ளது என்று உங்களுக்கு தெரியுமா?

**பதில்:** வழக்கறிஞர் தயார் செய்வதில் நான் கையொப்பம் மட்டும் செய்வேன் அதில் என்ன உள்ளது என்று எனக்கு தெரியாது.

**நீதிமன்ற கேள்வி:** இதற்கு முன் கலீல் என்பவர் தாக்கல் செய்த வழக்கு விவரத்தை தாவாவில் கூறியுள்ளீர்களா?

**பதில்:** கூறியுள்ளேன்.

**நீதிமன்ற கேள்வி:** இந்த வழக்கை நிராகரிக்க வேண்டும் என்று பிரதிவாதிகள் தாக்கல் செய்த மனுவை பார்த்தீர்களா?

**பதில்:** எனக்கு தெரியவில்லை.

**நீதிமன்ற கேள்வி:** முன்னதாக நடைபெற்ற வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பை நிறைவேற்ற வேண்டும் என்று பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள நிறைவேற்றுமனுவில் நீங்கள் முன்னிலை ஆகி உள்ளீர்களா?

**பதில்:** எனக்கு நினைவில்லை.

**நீதிமன்ற கேள்வி:** இந்த நீதிமன்றத்தில் உங்கள் சார்பாக தாக்கல் செய்யப்படும் மனுக்களில் நீங்கள்தான் கையொப்பம் செய்கிறீர்களா?

**பதில்:** ஆமாம். வழக்கறிஞர் கையொப்பம் கேட்பார் அதில் நான் கையொப்பம் செய்வேன்.

**நீதிமன்ற கேள்வி:** அவ்வாறு நீங்கள் கையொப்பம் செய்யும் தாளில் என்ன உள்ளது என்று படித்து பார்த்து கையொப்பம் செய்வீர்களா?

**பதில்:** இல்லை, வழக்கறிஞர் தான் கேட்கிறார் என்பதால் நான் படிக்காமல் கையொப்பம் செய்து கொடுப்பேன்.

**நீதிமன்ற கேள்வி:** நீங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கில் இதற்கு முன்பு நடைபெற்ற வழக்கை மறைத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது உங்களுக்கு தெரியுமா?

**பதில்:** அது எனக்கு தெரியாது.

**நீதிமன்ற கேள்வி:** வழக்குகளில் நீங்கள் செய்த கையொப்பத்திற்கு நீங்கள் தான் பொறுப்பாக முடியும். பழைய வழக்கை மறைத்து தாக்கல் செய்துள்ளதற்காக பொறுப்பேற்கிறீர்களா?

**பதில்:** வழக்கறிஞர் அனைத்து ஆவணங்களையும் கேட்ட அனைத்து அசல் ஆவணங்களையும் ஒப்படைத்தோம் நாங்கள் கையொப்பம் செய்து இருந்தால் நான் ஏற்றுக்கொள்ள தான் வேண்டும்.

**நீதிமன்ற கேள்வி:** இதற்கு முன்பு நடைபெற்ற வழக்கில் உங்களுடைய கிரைய ஆவணம் ரத்தான விவரம் தெரியுமா?

**பதில்:** அது எனக்கு தெரியாது.

**முடிவு நேரம் – 12.30 PM**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- XXXXX

District Munsif(FAC),
Uthangarai.